DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.81/2025**

Prosecution **PW.2**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | பாப்பாத்தி | கிராமம் : | |
| கணவர்பெயர் : | செல்வம் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.08.2025

1 முதல் 7 எதிரிகள் ஆஜரில்லை. சட்டப்பிரிவு 355 BNSS படி மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கிருஷ்ணராயபுரம் வட்டம் நடராஜபுரம் காலனியில் குடியிருந்து வருகிறேன். நான் கட்டிட வேலை செய்து வருகிறேன். 1 ம் எதிரி ஜயப்பன், 2 ம் எதிரி சஞ்சய், 3 ம் எதிரி ராஜதுரை, 4 ம் எதிரி அரவிந்த், 5 ம் எதிரி பாரதி, 6 ம் எதிரி பூலிங்கம், 7 ம் எதிரி பிரவீன் ஆகியோர்களை தெரியும். ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் தான். அ.சா.1 லட்சுமியை தெரியும், பக்கத்து வீட்டில் வசிக்கிறார். தேதி, மாதம் ஞாபகம் இல்லை. 4 வருடங்களுக்கு முன்பு காலையில் நேரம் சரியாக பார்க்கவில்லை. எங்கள் ஊரில் நடுவீதியில் சுந்தரம் வீட்டுக்கு அருகில் அரவிந்த், ஐயப்பன் ஆகியோர்கள் குடிபோதையில் அடியாட்களை கூட்டி வந்து சிலோன் அகதிகள் என்றும், சிலோன் நாய்களா, உங்களுக்கு என்ன தெனாவட்டா, உங்களை தூக்கி போட்டு மிதிச்சா யார் வந்து கேட்பார்கள் என்று சொன்னார்கள்.

2. நாங்கள் காவல் கண்காணிப்பு அலுவலகத்திற்கு புகார் கொடுக்க சென்றோம். ஐயப்பன், அரவிந்த் மற்ற ஆட்களும் எனது மகனை தூரத்தி, தூரத்தி அடித்தார்கள். எனது மகன் ஓடி ஒளிந்தான். ஒளிந்தவனை தேடிப்போய் அடித்தார்கள் கேட்க வந்த எனது கணவரையும் அடித்தார்கள். உங்களை

உயிரோடு விடமாட்டோம் என்றும் இரவோடு, இரவாக கொளுத்திவிடுவோம் என்று சொன்னார்கள். போலிசார் வந்து ஒரு வாரம் காவலுக்கு இருந்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 முதல் 7 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை போலிஸ் விசாரணை செய்யும் போது சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது மகனையும், கணவரையும் எதிரிகள் அடித்தாக சொல்லப்படும் நேரத்தில் நான் காவல் துறை கண்காணிப்பு அலுவலகத்திற்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். அவர்கள் அடித்தாக சொல்லித்தான் எனக்கு தகவல் தெரியும் என்றால் சரிதான். எனது மகனும், கணவரும் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக் கொண்டார்களா என்றால் இல்லை. அ.சா.1 எனக்கு என்ன உறவு முறை என்றால் உறவுமுறை இல்லை. நாங்கள் ஒரே பகுதியில் வசிக்கும் இலங்கையை சேர்ந்த நபர்கள் ஆகும்.

2. போலிஸ் விசாரணையில் எதிரிகள் தொடர்ந்து பலவருடங்களாக தொந்தரவு கொடுத்து வந்ததாக இவர்களை தண்டிக்கும் விதத்தில் சம்பவத்தை மிகைப்படுத்தி லட்சுமி புகார் கொடுத்தாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரிகள் எங்கள் பகுதிக்கு வரவும் இல்லை, மிரட்டவும் இல்லை, அடிக்கவும் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.1 எனக்கு வேண்டியவர்என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
Date: 2025.08.01 17:39:23 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.